கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ளார். அப்பள்ளி தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, அந்தப் பள்ளியைத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, அப்பள்ளி பழுதடைந்திருந்தால், அப்பழுதை நீக்கி அதற்குத் தேவையான மராமத்துப் பணி அனைத்தையும் செய்து கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

துணை மின் நிலையம்

***57719 திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகரில் புதிய தொழிற்பேட்டைக்காக துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகரில் 110/33/11 கே.வி. துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது. இத்துணை மின் நிலையத்தில் 110/33 கே.வி.-யில் 2x16 M.V.A. *மின் திறன்கொண்ட மின்மாற்றிகளும், 110/11 கே.வி.-யில் 2x16* M.V.A. *திறன் கொண்ட மின்மாற்றிகளும் இயங்கி வருகின்றன. இந்த மின் மாற்றிகளின் உச்ச மின் பளு முறையே 24.96* M.V.A. *மற்றும் 18.7* M.V.A. *ஆகும். புதியதாக அமையவுள்ள தொழிற்பேட்டையின்*

மின் பளுவை எதிர்கொள்ள இப்பகுதியில் உள்ள விருதுநகர் 110/33/11 கே.வி. துணை மின் நிலையமே போதுமானதாகும். எனவே, விருதுநகரில் அமையவுள்ள புதிய தொழிற்பேட்டைக்காக துணை மின் நிலையம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படைத்தல், காத்தல், அழித்தல் என முத்தொழில் புரிந்து, உலகாளும் இறைவனின் அம்சமாக, தமிழகம் முதலிடத்திற்கு வர புதிய திட்டங்களைப் படைத்தல், கட்சித் தொண்டர்களைக் கண்மணிபோல் காத்தல், சுற்றி நிற்கும் பகையினை தன் வல்லமையால் அழித்தல் என (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனாய் நம்மை வழிநடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நல்வணக்கங்கள்.

அதேபோல, மின் துறையின் முப்பரிமாணங்களான படைத்தல்-generation, பாங்குடன் மின்வழி நடத்தல்-transmission மற்றும் பகிர்தல்-distribution ஆகிய முப்பரிமாணங்களிலும் முத்திரைச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மின் மிகை மாநிலமாக மாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றி. குறிப்பாக, இதுவரை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட ரூ.84,000 கோடிக்கும் மேற்பட்ட திட்டங்கள் ஒருபுறம் செயல்பாட்டில் இருந்தாலும், ஒரே நாளில் ரூ.30,000 கோடிக்கும் மிகுந்த மின் திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதியில் இதுவரை இருந்த மின்சார உற்பத்தி மற்றும் demand-supply சரியாக வந்துகொண்டிருக்கிறது. மேலும் இரண்டு மிகப் பெரிய தொழிற் திட்டங்கள் எனது தொகுதியிலும், அதற்கு அருகில் உள்ள சாத்தூர் தொகுதியிலும் உருவெடுத்து வருகின்றன. குறிப்பாக, ஸ்ரீவித்யா கல்லூரிக்கு எதிரில் உள்ள தொழிற்பேட்டையில் 54 plot-ல் புதிய தொழில்கள் உருவாகி

வருவதால், நிச்சயமாக, விருதுநகர் தொகுதியில், 3 துணை மின் நிலையங்கள் மற்றும் மின்மாற்றிகள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். குறிப்பாக, ஏற்கெனவே செயல்பாட்டிற்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மற்றொரு கேள்வியின்போது பேசலாம். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: அதேபோல, விருதுநகர் நகரத்தில் 33/11 கே.வி. திறன் கொண்ட Indoor sub-station செயல்பாட்டிற்கு வந்ததற்கு நன்றி. உள்ளரங்கத் துணை மின் நிலையம் செயல்பாட்டிற்கு வந்துவிட்டது. ஆமத்தூர் அருகில் உள்ள வெள்ளூரில் 33/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் Master Plan-ல் approve ஆகியிருக்கும். அந்தத் திட்டத்தையும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். எரிச்சநத்தத்தில் Additional Power Transformer-ஐ 8 கே.வி.-க்குக் கொண்டுவர வேண்டும். ஆர்.ஆர். நகரில் 10 M.V. Power Transformer, இந்த 3 திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தால், இப்போது விருதுநகரில் தாங்கள் தந்திருக்கும் Restructured Accelerated Development Power Reforms திட்டத்தின்கீழ் 100 Transformers போட்டு வந்திருக்கிற ரூ.9 கோடிக்கான திட்டம் முழுமை அடையும். சாத்தூரில் Industrial Park அமைக்கும் திட்டம் வரும்போது, அதனுடைய additional demand-ஐ இது தாங்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 3 திட்டங்களையும் பரிசீலனை செய்து அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், படைத்தல், காத்தல், அழித்தலில் எல்லாம் வல்லவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று பாராட்டினார்கள். அதைத்தான் வள்ளுவர்,

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு”

என்று சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 2,000 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் சொன்ன வழியிலே, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மின்சாரத் துறையிலும் மற்றுமுள்ள துறைகள் ஒவ்வொன்றிலும் மக்களின் தேவையை அறிந்து, திட்டங்களை வழங்கி, சாதனைத் தலைவியாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, விருதுநகர் மாவட்டத்திலே 8 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அதிலே 6 துணை மின் நிலையங்கள் இப்பொழுது செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன. இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் மிக விரைவிலே முடிக்கப்பட்டு, அவை செயல்பாட்டிற்கு வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

அறிவித்ததை மட்டுமல்லாமல், அறிவிக்காத ஒரு திட்டத்தையும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தியிருக்கிறது. அந்தவகையில், நல்லம்மநாயக்கன்பட்டியிலே 230/110 கே.வி.திறன்கொண்ட ஒரு புதிய துணை மின் நிலையம், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில் நிறுவப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அறிவிக்கப்பட்டவை 8 துணை மின் நிலையங்கள். ஆனால், அறிவித்ததோடு மட்டுமல்லாமல், கூடுதலாக ஒரு துணை மின் நிலையத்தை விருதுநகர் மாவட்டத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, விருதுநகர் பகுதியிலே அமையவிருக்கின்ற தொழிற்பேட்டைக்குக் கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். விருதுநகரில் புதிதாக அமையவிருக்கும் பாவாலி தொழிற்பேட்டைக்கு பின்வரும் மின்னூட்டிகள் மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்; 110/33-லே ஏற்கெனவே 2 x 32 M.V.A. திறன்கொண்ட

மின்மாற்றிகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு இருக்கின்ற உச்சபட்ச மின் பளுவே 24.96 மெகா வாட்தான். அந்த 110/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தினுடைய மின் திறன் 32 M.V.A. ஆகும். ஆனால், அங்கேயிருக்கின்ற உச்சபட்ச மின் பளு 18.7 M.V.A.-தான். ஆகவே, அங்கே 7.03 M.V.A. கூடுதலாக, தேவைக்கும் மிகுதியாக இருக்கின்றது. அதேபோன்று, 110/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்திலே, ஏறத்தாழ 13.3 M.V.A. திறன் அளவிற்குக் கூடுதல் மின் பளு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, இன்னும் 10 ஆண்டுகளுக்குப் போதுமான அளவிற்கு அந்தப் பகுதியிலே மின் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் தற்போதைக்கு புதிதாக துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவை ஏற்படவில்லையென்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்று, அவரது வேண்டுகோளுக்கிணங்க, அந்தப் பகுதியிலே பெருகிவரும் மின் பளுவைக் கருத்திற்கொண்டு, மின் மாற்றிகளுடைய திறன் மேம்படுத்தப்படும். ஆனால், அந்தப் பகுதியிலே கூடுதலாக புதிதாக துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. அங்கே உள்ள துணை மின் நிலையங்களிலே இருக்கின்ற Power Transformers-ல் இருக்கின்ற 16 M.V.A. திறன்கொண்ட மின் மாற்றியை அகற்றிவிட்டு, 25 M.V.A. திறன்கொண்ட மின் மாற்றியை அமைத்தால், போதுமான அளவிற்கு அந்தப் பகுதியினுடைய மின் தேவை நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்குள்ள துணை மின் நிலையத்தினைத் தரமுயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. வெள்ளூர் (செவலூர்), எரிச்சநத்தம், ஆர்.ஆர். நகர் ஆகிய மூன்று இடங்கள் தவிர, சூலக்கரையில் உள்ள 8 M.V.A. Additional Power Transformer-ம் இணைந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய 18.7 M.V.A. demand என்பது, அதிகாரிகளின்

2015 செப்டம்பர் 2]

கருத்துப்படி, அடுத்த மூன்று வருடங்களில் இரு மடங்காக உயரும். அதற்கு இந்த நான்கு துணை மின் நிலையங்களும் உபயோகமாக இருக்கும் என்பதைத் தங்களது மேலான பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கேயிருக்கின்ற உச்சபட்ச மின் பளு 18.7 M.V.A.-தான். ஏறத்தாழ 13.3 M.V.A. திறன் அளவிற்குக் கூடுதலாக மின் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மின் வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்குத் தொழில்கள் அந்தப் பகுதியிலே வருவதற்குக் குறைந்தது இன்னும் 5 ஆண்டுகள் ஆகும். திறன் கூடுதலாக உள்ள இந்த 13.3 M.V.A. மின் பளுவைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் புதிதாகத் தொழில்கள் வருவதற்கு இன்னும் சற்று காலம் ஆகும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே இருக்கின்ற துணை மின் நிலையங்களிலே, தேவை ஏற்படுகின்றபோது, நிச்சயமாக இருக்கின்ற மின் மாற்றிகளை மாற்றி, அந்தத் துணை மின் நிலையத்தினுடைய திறன் மேம்படுத்தப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம்

***53702—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—